பக்கங்கள்: 08 விலை: 20/=
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 01 | வள்ளுவர் ஆண்டு 2051 | வைகாசி 26 திங்கட்கிழமை 08.06.2020 | கதிர் 83

# யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற இந்தியருக்கு கொரோனா தொற்று

## இணுவிலில் பல நாள்களாகத் தங்கியிருந்தவர்

யாழ்ப்பாணம், ஜூன் 08

இலங்கையில் சிக்கிக்கொண்ட இந்தியர்களை மீட்கும் திட்டத்தின் கீழ் அழைத்துச் செல்லப்பட்ட ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டிருக்கின்றது. அவர் யாழ்ப்பாணம் இணுவிலில் தங்கியிருந்தவர் என்பதும் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

2

## திடீரென மயங்கி விழுந்தவர் சாவு

### நாவற்குழியில் இன்று சம்பவம்

நாவற்குழியில் ரயில் பாதை துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருந்த ஒப்பந்தப் பணியாளர் ஒருவர் இன்று மதியம் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

சம்பவம் சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட நாவற்குழி ரயில் நிலையத்தருகில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

ரயில் திணைக்களத்தின் கீழ் ஒப்பந்த அடிப்படையில், ரயில் தண்டவாளப் பாதை சீர்செய்யும் பணியில் ஈடுபட்டிருந்தபோதே இவர் மயங்கி வீழ்ந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக அவர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்து விரையப்பட்டார்.

எனினும் அவரது உயிரைக் காப்பாற்ற முடியவில்லை.

## கொழும்பில் சீனப் பெண் அறையில் மர்மச் சாவு!

கொழும்பு, ஜூன் 08

கொழும்பில் தங்கியிருந்த சீனப் பெண் ஒருவர் திடீரென உயிரிழந்தமை தொடர்பில் கொள்ளுப்பிட்டி பொலிஸார் விசாரணைகளைத் தொடக்கியுள்ளனர்.

கொள்ளுப்பிட்டி, கேரன் ஹெபர் எவெனிவ் வீட்டுத்தொகுதியில் வசித்த 51 வயதான ஷென் ஷெரோன் என்ற சீனப் பெண்ணே உயிரிழந்தார்.

வீட்டில் தனியாக இருந்த அவரது இறப்பு எவ்வாறு நிகழ்ந்தது என்பது தொடர்பில் முழுமையான விசாரணை நடத்தப்படும் என்று பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கையில் அடையாளம் காணப்பட்ட முதலாவது கொரோனா நோயாளியும் சீனாவைச் சேர்ந்த பெண் ஒருவரே என்கிற நிலையில் உயிரிழந்த சீனப் பெண்ணின் இறப்புக் குறித்து அதிகாரிகள் இயல்பிலேயே அதிக அக்கறை கொண்டிருக்கின்றனர்.

முதலாவது கொரோனா நோயாளியாக அடையாளம் காணப்பட்ட பெண் முற்றிலுமாகக் குணமடைந்து வீடு திரும்பியிருந்தார்.

2

## கடும் பாதுகாப்புக்கு மத்தியில் வற்றாப்பளையில் பொங்கல்



(சண்முகம் தவசீலன்)

பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கும் கெடுபிடிகளுக்கும் மத்தியில் வரலாற்றுச் சிறப்பு மிக்க வற்றாப்பளைக் கண்ணகை அம்மன் ஆலயத்தின்

2

## ஐ.தே.கட்சித் தலைமையக கூட்டத்தில் பெரும் குழப்பம்

### உரையை நிறுத்திவிட்டு வெளியேறினார் ரணில்

கொழும்பு, ஜூன் 08

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் கட்சித் தலைமையகமான சிறிகொத்தவில் இன்று நடைபெற்ற கட்சியின் தொழிற் சங்கக் கூட்டத்தில் கடும் குழப்பம் ஏற்பட்டது.

கூட்டத்தில் கடும் கூச்சல், குழப்பம் நிலவிய நிலையில் அங்கு பேசிக்கொண்டிருந்த ஐ.தே.கவின் தலைவா ரணில் விக்கிரமசிங்க தனது உரையை நிறுத்திவிட்டு கூட்டத்திலிருந்து

2

## டெங்கு ஒழிப்பு வாரம் இன்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 08

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இன்றிலிருந்து மூன்று நாள்களுக்கு டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலாளரின் பணிப்புரைக்கமைய இன்றிலிருந்து எதிர்வரும்

2

## வடக்கு கிழக்கிலிருந்து கொழும்புக்கு இன்று முதல் ரயில் சேவை ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 08

கொரோனா பெருந்தொற்றுப் பரவல் காரணமாக நிறுத்தப்பட்ட வடக்கு, கிழக்கு நகரங்களுக்கும் கொழும்புக்கும் இடையிலான ரயில் சேவை இன்று மீண்டும் வழமைக்குத் திரும்பியது.




2

## கூட்டமைப்புடன் பேச்சு நடத்தினால் மிகவும் எச்சரிக்கையுடன் இருங்கள்



### ராஜபக்ஷ அரசிடம் சிங்கள இனவாத அமைப்பு வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 09

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுகளை முன்னெடுப்பது தொடர்பில் நாட்டின்

2

## அரச பணியாளர்கள் அனைவரும் பணிக்கு திரும்பும் காலம் வந்தது

கொழும்பு, ஜூன் 08

அரச அலுவலகங்கள் முழு அளவில் மீண்டும் இயக்குவதற்கான பச்சைக் கொடியை ஆட்சியாளர்கள் காட்டியுள்ளனர்.

அரச திணைக்களம் ஒன்றின் தலைவர் தனது பணியாளர்கள் அனைவரும் பணிக்கு வந்தேயாகவேண்டும் என்று கருதினாரானால் அவர்களை அழைப்பதற்கு அவருக்கு எந்தவிதத் தடையும் இல்லை என்று பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

2



## கடும் பாதுகாப்புக்கு மத்தியில் வற்றாப்பளையில் ..................



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வருடாந்தப் பொங்கல் உற்சவம் இன்று பக்திபூர்வமாக இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அடையாளங்களில் ஒன்றான வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்தின் பொங்கலையொட்டி முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் இருந்து இன்று திங்கட்கிழமை அதிகாலை மடப்பண்டம் எடுத்துவரப்பட்டது.

வளர்ந்து நேர்ந்து பொங்கல் என்று அழைக்கப்படும் இந்தச் சடங்கு நிகழ்வு காட்டா விநாயகர் ஆலயத்தில் சிறப்புற இடம்பெற்று, பொங்கல் மடைபடைக்கப்பட்ட பின்னர் அங்கிருந்து மடப்பண்டம் வற்றாப்பளைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

கட்டா விநாயகர் ஆலய வளாகத்தினைச் சூழப் படையினர் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ள போதும் மக்கள் பலரும் ஆலய நிகழ்வில் கலந்துகொண்டு வழிபாட்டில் ஈடுபட்டனர்

உப்பு நீரில் கடந்த 7 நாள்களாக காட்டா விநாயகர் ஆலயத்தில் எரிக்கப்பட்டுவந்த பக்தி விளக்கும் மடப்பண்டத்தோடு வற்றாப்பளை அம்மன் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

மடப்பண்டங்கள் வந்து சேர்ந்ததும் பாரம்பரிய முறைப்படி வற்றாப்பளை அம்மனுக்கான பொங்கல் நிகழ்வு இடம்பெற்றது.

வருடாந்தம் இந்தப் பொங்கல் நிகழ்வில் லட்சக் கணக்கான மக்கள் கூடுவது வழமை. ஆனால் கொரோனா பெருந் தொற்றுக் காரணமாக இந்த ஆண்டு பொங்கல் நிகழ்வில் மக்கள் கலந்து கொள்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

இருப்பினும் தமது நேர்த்திக் கடனாக பிரதட்டை மற்றும் தீச் சட்டி எடுப்பதற்காக ஆலயத்திற்கு வந்த பக்தர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

ஆலயத்தை சூழ இராணுவத்தினரும் சிறப்பு அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர்.

வீதித் தடைகள் போட்டு ஆலயத்திற்கு வருபவர்களை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## ஐ.தே.கட்சித் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெளியேறினார்.

இதனால் ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்கக் கூட்டம் இடைநடுவில் கைவிடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் கட்சியின் பொதுச் செயலாளர் அகிலவிராஜ் காரியவசம், தேசிய ஊழியர் சங்கத்தின் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலா கலந்துகொண்டிருந்தனர்.

## கொழும்பில் சீனப் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சீனப் பெண் உயிரிழந்த வீட்டுத் தொகுதியில் வசிக்கும் நபர் ஒருவர் வழங்கிய தகவலை அடுத்தே பொலிஸாருக்கு அவரது இறப்பு குறித்த தகவல் தெரியவந்தது.

வீட்டு அறையில் கட்டிலின் மீது சீனப் பெண்ணின் சடலம் கிடந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உடற்கூறு பரிசோதனைகளுக்காக அவரது சடலம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
புடவை வியாபாரத்திற்காக யாழ்ப்பாணம் வந்திருந்த தமிழகத்தைச் சேர்ந்த கணேஸ் பாபு என்ற 40 வயது நபருக்கே கொரோனா தொற்று இருப்பது இந்தியாவில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

கணேஸ்பாபுவும் இன்னும் மூவரும் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து புடவை வியாபாரத்தில் ஈடுபட்டனர். கொரோனா பெருந் தொற்றுப் பரவல் தொடங்கியதை அடுத்து நாடு முழுமையாக முடக்கப்பட்ட நிலையில் இந்தியாவிற்குத் திரும்ப முடியாது சிக்கிக் கொண்ட அவர்கள் இணுவிலில் தங்கியிருந்தனர்.

கொரோனா முடக்க காலத்தில் அவர்களில் ஒருவர் இங்கேயே உயிரிழந்து விட்டார். அவரது உடலைத் தமிழ் நாட்டுக்கு எடுத்துச் செல்வதற்கான வசதிகளை அந்தக் காலத்தில் பெற முடியாது என்பதால், யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் உதவியுடன் மல்லாகம் நீதிமன்றத்தின் அனுமதி பெற்று அவரது இறுதிக் கிரியைகள் யாழ்ப்பாணத்திலேயே செய்யப்பட்டன.

வெளிநாடுகளில் இவ்வாறு சிக்கிக் கொண்ட இந்தியர்களை மீட்பதற்கான 'வந்தே பாரத்' திட்டத்தின் கீழ் கடற்படைக் கப்பல்களைக் கொண்டு நடத்தப்பட்ட சமுத்திரா சேது நடவடிக்கையின் கீழ் ஜூன் மாதம் முதலாம் திகதி கொழும்பிலிருந்து 713 பேர் இந்தியக் கடற்படைக் கப்பலில் ஏற்றிச் செல்லப்பட்டனர்.

அவர்களில் கணேஸ்பாவும் ஒருவர். இந்தியாவைச் சென்றடைந்ததும் நடத்தப்பட்ட கொரோனா பரிசோதனைகளில் கணேஸ் பாபுவுக்கும் கொரோனா தொற்று இருப்பது 2ஆம் திகதியே உறுதிப்படுத்தப்பட்டு விட்டது.

சமுத்திர சேது நடவடிக்கையின் கீழ் இந்தியர்களை அழைத்துச் செல்வதற்கான கப்பலுக்குச் செல்வதற்கு யாழ்ப்பாணத்தில் இருந்து கணேஸ் பாபுவும் மற்றவர்களும் பேருந்து ஒன்றில் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

காலையில் கொழும்பைச் சென்றடைந்த அவர்கள் கப்பலுக்குச் செல்வதற்கு முன்பாக புறக்கோட்டையில் உள்ள ஓரிடத்தில் காலைக் கடன்களை முடித்துக் குளித்துவிட்டே சென்றிருக்கின்றனர்.

கணேஸ் பாபுவுடன் சென்ற ஏனையவர்களுக்கு கொரோனா தொற்று ஏதும் இல்லாத நிலையில் அவருக்கு மட்டுமே தொற்று ஏற்பட்டிருப்பதால் புறக்கோட்டையில் காலைக் கடன்களை முடிக்கச் சென்ற இடத்திலிருந்தே அவருக்கு தொற்று ஏற்பட்டிருக்குமோ என்று இந்தியத் தூதரக அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான விரிவான விசாரணைகள் தொடங்கப்பட்டுள்ளன. கணேஸ் பாவு தங்கியிருந்த இடங்களில் தேவையான தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் சுகாதாரத் துறை அதிகாரிகள் தயாராக வருகின்றார்கள் என்று அறியவந்தது.

## அரச பணியாளர்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொரோனா பெருந் தொற்றுக் காரணமாக அரச பணியாளர்களில் அதிகமானவர்கள், குறைந்தது அரைவாசிப் பேர் வீடுகளில் இருந்து பணியாற்றுவதற்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இனி அவ்வாறு இருப்பதற்கான அவசியம் இல்லை என்று பொது நிர்வாக அமைச்சின் செயலர் தெரிவித்தார். பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இன்று முதல் அனைத்து அரச ஊழியர்களையும் பணிக்கு அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சகல அரச நிறுவனங்கள் மற்றும் திணைக்கள தலைவர்கள், பணிப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கின்றது என்றும் செயலாளர் தெரிவித்தார்.

அரச பணியாளர்கள் அனைவரும் கட்டாயம் வேலைக்குச் சமூகமளிக்க வேண்டும் என்பது குறித்து அடுத்து வரும் நாள்களில் உறுதியானதொரு தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டில் இன்று முதல் பொது போக்குவரத்து சேவை வழமையை போன்று இயங்கும் என்பதனால் அரச ஊழியர்கள் பணிக்கு வருவதற்கு போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக இருக்காது என்றார் அவர்.

## டெங்கு ஒழிப்பு ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மூன்று நாள்கள் டெங்கு ஒழிப்பு வாரமாக சுகாதாரத் திணைக்களத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் சுகாதாரப் பரிசோதகர்கள், பொலிஸார் இணைந்து யாழ். போதனா வைத்தியசாலை வீதியில் உள்ள வீடுகள் மற்றும் கடைகள், வியாபார நிலையங்களில் டெங்கு நோயினைக் கட்டுப்படுத்தும் பரிசோதனை - விழிப்பூட்டல் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர்.

வெற்றுகாணிகளில் அந்த காணி உரிமையாளர்களால் முறைப்படி பற்றைகளை வெட்டி அகற்றி அதற்கு மேலாக அங்கு காணப்படுகின்ற சிரட்டைகள், பிளாஸ்டிக் கொள்கலன் போன்றவற்றை அகற்றுவது பிரதானமானதாக நடைமுறைப்படுத்த வலியுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோன்று வீடுகளிலும் நீர் வழிந்தோடும் பகுதிகளை அடிக்கடி துப்பரவு செய்ய வேண்டிய அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

தற்பொழுது கோவிட் - 19 நோய்ப் பரவலுக்கு இணையாக இந்த டெங்கு பரவலும் நாட்டில் அதிகரித்துக் காணப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிரதேச செயலர்கள், சுகாதார மருத்துவ அதிகாரிகள், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் இணைந்து இந்த பரிசோதனைகளை முன்னெடுத்தனர்.

## வடக்கு கிழக்கில் இருந்து கொழும்புக்கு ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மார்ச் மாதம் 20ஆம் திகதி ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்பட்டது முதல் முடங்கியிருந்த ரயில் மற்றும் பஸ் சேவைகள் இன்று மீண்டும் தொடங்கும் என்று முன்னதாக ஆட்சியாளர்கள் அறிவித்திருந்தனர்.

இன்று காலை காங்கேசன்துறையிலிருந்து பயணத்தை ஆரம்பித்த யாழ். தேவி யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தை வந்தடைந்து அங்கிருந்து கொழும்பை நோக்கிப் புறப்பட்டது.

பயணிகள் யாழ்ப்பாணம் ரயில் நிலையத்தில் உடல்வெப்பச் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே பயணத்தை தொடர அனுமதிக்கப்பட்டனர்.

வழக்கமான அளவு கூட்டம் நேற்றைய தினம் இல்லை என்று எமது செய்தியாளர் தெரிவித்தார்.

இன்று காலை 5.45 மணிக்கு கொழும்பிற்கான முதலாவது சேவையும், 9.45 மணிக்கு இரண்டாவது சேவையும் ஆரம்பிக்கப்பட்டது எனத் தெரிவித்தார் யாழ். ரயில் நிலைய மேலாளர் ரி.பிரதீபன்.

உத்தர தேவி ரயில் வவுனியாவில் இருந்து இன்று காலை 8.10 மணியளவில் கொழும்பு நோக்கி புறப்பட்டது.

இதன்போது சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பயணிகள் ஏற்றப்பட்டதுடன், ரயில் நிலையத்தில் சமூக இடைவெளியும் பேணப்பட்டது.

வவுனியா ரயில் நிலைய உத்தியோகத்தர்கள் சமூக இடைவெளி மற்றும் சுகாதார நடைமுறைகள் தொடர்பில் பயணிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கினர்.

இரு மாதங்களுக்கு மேலாக பாவனையற்றுக் காணப்பட்ட ரயில்வே தண்டவாளங்களில் காணப்படும் புற்களை துப்பரவு செய்யும் பணிகளில் ரயில்வே ஊழியர்கள் ஈடுபட்டமையினையும் அவதானிக்ககூடியதாக இருந்தது.

மட்டக்களப்பில் இருந்து கொழும்பு பகுதிக்கு இன்று திங்கட்கிழமை காலை 6.10 மணிக்கு ரயில் சேவை இடம் பெற்றதாக மட்டக்களப்பு ரயில் நிலைய அதிபர் ஏ.யூ.என்.நுபைஸ் தெரிவித்தார்.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் போக்குவரத்திற்கு விதிக்கப்பட்டிருந்த வரையறை தளர்த்தப்பட்டுள்ளதால் இன்று திங்கட்கிழமை முதல் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் கொழும்பு நோக்கி சேவைகள் தொடங்கப்பட்டுள்ளன.

## கூட்டமைப்புடனான பேச்சின்போது ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தற்போதைய அரசியல் தலைமையான ராஜபக்ஷ அரசு மிகவும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும்.

- இவ்வாறு தேசிய அமைப்புகளின் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர வலியுறுத்தியுள்ளார்.

போருக்குப் பின்னர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பின்பற்றுகின்ற தந்திரோபாயம் குறித்து ராஜபக்ஷ அரசு எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பேச்சுகளை மேற்கொள்வதில் எந்தத் தவறும் இல்லை. அரசுக்கும் எந்த அரசியல் கட்சிக்கும் எவருடனும் பேச்சுகளை மேற்கொள்வதற்கான உரிமையுள்ளது. ஆனால், ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாட்டின் ஒற்றையாட்சியைப் பாதுகாப்போம் என அளித்த வாக்குறுதியிலிருந்து ராஜபக்ஷ அரசு பின்வாங்கக்கூடாது எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகளின் பயங்கரவாதப் போராட்டத்தை ஏற்கவில்லை என அதன் உயர் தலைமை சமீபத்தில் அறிவித்துள்ளமை அரசுடன் கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்குக் கூட்டமைப்பு தீவிர முயற்சிகளை எடுப்பதை வெளிப்படுத்தியுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கவனக் குறைவாக தமிழீழ விடுதலைப்புலிகளை நிராகரித்திருக்கமாட்டார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுமந்திரனின் கருத்தை கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும், உலகத் தமிழர் பேரவையும் அங்கீகரித்துள்ளன என்பதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2001ஆம் ஆண்டில் தமிழீழ விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் எனத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இறுதிவரை வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் உறுதியாக நின்றது.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ஷ மீது 69 இலட்சம் மக்கள் வைத்துள்ள நம்பிக்கைக்குத் துரோகமிழைக்க வேண்டாம் என்று அரசிடம் நான் கேட்டுக்கொள்கின்றேன்.

தென்பகுதி வாக்காளர்களுக்கு ஏமாற்றமளிக்கக்கூடிய நிகழ்ச்சி நிரலை அரசு பின்பற்றக்கூடாது.

வடபகுதியில் தனது செல்வாக்குக் குறைந்து வருவதன் காரணமாகவும், ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்ட பிளவு காரணமாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ராஜபக்ஷ அரசுடன் புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கும் பேச்சுகளில் ஈடுபடுவதற்குமான முயற்சிகளில் ஈடுபட்டிருக்கலாம்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழீழ விடுதலைப்புலிகளை ஏற்றுக்கொள்ளவில்லை எனத் தெரிவித்துள்ளதால் ஜெனிவா குறித்த அதன் நிலைப்பாடு என்னவென தெளிவுபடுத்துமாறு அரசு கோர வேண்டும் - என்றார்.

# நமது பார்வை

**உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை**

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## 19 ஆவது திருத்தத்தை மாற்ற இங்குவாரா மஹிந்தர்

வரும் பொதுத் தேர்தலில் பொதுஜன பெரமுன– மொட்டுக் கட்சி – பெருவெற்றியீட்டும். அது ஆட்சிக்கு வந்ததும் அரசமைப்பின் 19ஆவது திருத்தம் மாற்றியமைக்கப்படும். அது தலைகீழாகும்.

– இவ்வாறு மொட்டுக் கட்சியின் சார்பில் அதன் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தனா தெரிவித்தார்.

அதுதான் மொட்டுக் கட்சியினரின் இலக்கும் போக்கும் என்பது தெரிந்ததே.

ஆனால் 19ஆவது திருத்தத்தை எந்த வழிவத்தில் கோட்டாபய தலைமையிலான புதிய அரசு மாற்ற முனையும் என்பதுதான் கேள்வி.

அதனை ஆராய்வதற்கு 17, 18, 19ஆவது அரசமைப்புத் திருத்தங்களை நாம் ஒரு மேலோட்ட அலசல் செய்ய வேண்டும்.

புதிய – சுயாதீன – ஆணைக்குழுக்கள் மூலம் தேர்தல், பொலிஸ் திணைக்களம், நீதித்துறை போன்றவற்றைக் கையாளும் முறைமை 2001 செப்டெம்பரில் 17 ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலம் சந்திரிகா அரசினால் கொண்டு வரப்பட்டது.

அந்த அரசில் மஹிந்த ராஜபக்ஷவும் அங்கம் வகித்தாராயினும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்களை சற்றுக் குறைக்கும் அந்த அரசியல் நகர்வுக்கு சந்திரிகாவுடன் சேர்ந்து போவதைத் தவிர அவருக்கு வேறு மார்க்கம் இருக்கவில்லை.

ஆனால் யுத்தத்தின் முடிவில் தாம் மீண்டும் ஜனாதிபதியாகப் பெருவெற்றியீட்டியவுடன் மஹிந்த ராஜபக்ஷ, அதற்கு முன்னர் 17ஆவது திருத்தம் மூலம் கொண்டு வரப்பட்ட – ஜனநாயக மயப்படுத்தப்பட்ட – பல விடயங்களை 18ஆவது திருத்தம் மூலம் அடியோடு மாற்றியமைத்தார்.

2010 செப்டெம்பரில் நிறைவேறிய இந்த 18ஆவது அரசமைப்புத் திருத்தம் ஒருவர் இரண்டு தடவைகளுக்கு மேல் மக்களினால் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட முடியாது என்ற அரசமைப்புக் கட்டுப்பாட்டைத் தகர்த்தது. ஒருவர் எத்தனை தடவையும் ஜனாதிபதியாக முடியும் என்ற கட்டற்ற நிலையை அது ஏற்படுத்தியது.

அது மட்டுமல்ல, பத்து உறுப்பினர்களைக் கொண்ட அரசமைப்புக் கவுன்ஸில் இல்லா தொழிக்கப்பட்டது. அதற்குப் பதிலாக ஐவர் கொண்ட நாடாளுமன்றக் கவுன்ஸில் ஸ்தாபிக்கப்பட்டது.

சுயாதீன ஆணைக்குழுக்கள் எல்லாம் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் நேரடியாகக் கொண்டு வரப்பட்டன.

அதாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு கட்டுமற்ற அதிகாரத்தைப் பெறவும், மக்கள் செல்வாக்கு இருக்குமானால் அவர் காலங்காலமாக முடியாட்சி மன்னர் போல ஆட்சிப் பீடத்தில் இருக்கவும் 18ஆவது அரசமைப்புத் திருத்தம் வழி செய்தது.

அதனையே 2015 ஜனவரியில் ஆட்சிக்கு வந்த நல்லாட்சி அரசு 19ஆவது திருத்தம் மூலம் முற்றிலும் மாறாக மாற்றியமைத்தது.

தேர்தல், பொலிஸ், நீதிச்சேவை போன்றவை நேரடியாக சுயாதீனமாக ஆணைக்குழுக்களின் கட்டுப்பாட்டில் வந்தன.

ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் ஆறு ஆண்டுகளில் இருந்து ஐந்து ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டது.

சுருங்கக் கூறுவதானால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் அதிகாரங்கள் 19ஆவது திருத்தம் மூலம் கணிசமாக வெட்டிக் குறைக்கப்பட்டன. அவை நாடாளுமன்றத்துக்கு வழங்கப்பட்டன.

இந்த ஒழுங்கையே மீண்டும் குழப்புவதற்குக் கங்கணம் கட்டி நிற்கின்றது மொட்டுக்கட்சி என்று செய்திகள் வெளியாகின்றன.

ஆனால், இப்படி 19ஆவது திருத்தத்தை மாற்றும் விடயத்தில் மொட்டுக் கட்சியின் அதியுயர் தலைமைக்குள்ளேயே குழப்பம் இருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தகவல் தருகின்றன.

கட்சிக்குள்ளும், மக்கள் மத்தியிலும் செல்வாக்குப் பெற்றிருந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்போதைய ஆட்சி முறைமையில் இன்று இரண்டாம் இடத்தில்தான் உள்ளார்.

இதுவரை அரசியலில் ஈடுபட்டிருக்காத – ஓர் உள்ளூராட்சித் தேர்தலைக் கூட எதிர்கொள்ளாத – கோட்டாபய ராஜபக்ஷ இன்று நேரடியாக நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியில்.

முன்னாள் இராணுவ அதிகாரியும் பாதுகாப்புச் செயலாளருமான அவர், தமக்குக் கிடைத்த பதவியை வைத்துக் கொண்டு தமது ஆட்சிப் பீடத்தையே இராணுவ மயமாக்கும் நிலைமையை நோக்கி நகர்த்தி கொண்டிருக்கின்றார் என்பது இப்போது வெளிப்படையாகத் தென்படுகின்றது.

அத்தகைய இராணுவ ஆட்சி முறைமையை நோக்கி நகரும் ஒரு ஜனாதிபதிக்கு மேலும் கட்டு மட்டில்லாத அதிகாரங்களை வழங்குவதற்கு வகை செய்யும் விதத்தில் 19ஆவது அரசமைப்புத் திருத்தம் மாற்றியமைக்கப்படுமானால் விளைவு விபரீதமாகும்.

அத்தகைய போக்கினால் நாட்டுக்கு எதிர்காலத்தில் பேராபத்து என்பது ஒரு புறம் இருக்க, மறுபுறத்தில் ஏற்கனவே அரசியலில் முன்னிலையையும், செல்வாக்கையும், பதவி அதிகாரத்தையும் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து வரும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தன்னை மேலும் பலவீனப்படுத்த வழி செய்யக் கூடிய 19ஆவது திருத்த நீக்கத்துக்கு இணங்குவாரா என்பது மிகப் பெரிய கேள்விக்குறியே.

### தேர்தல் ஆணைக்குழுவிலிருந்து

# ஹூலை உடனே வெளியேற்றுங்கள்!

## அரசமைப்பு பேரவையிடம் மஹிந்த அணி வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 09

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினரான பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் சட்ட விதிமுறைகளை மீறிச் செயற்பட்டுள்ளார். எனவே, அவரைத் தேர்தல்கள் ஆணைக்குழுவிலிருந்து உடன் வெளியேற்ற வேண்டும்.

– இவ்வாறு அரசமைப்பு பேரவையின் தலைவரான சபாநாயகர் கரு ஜயசூரியவிடம் மஹிந்த அணி வலியுறுத்தியுள்ளது.

தேசிய சுதந்திர முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் சுற்றுச்சூழல் அமைச்சருமான ஜயந்த சமரவீர இந்த வலியுறுத்தலை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினரான பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் ஒரு மனநலம் பாதிக்கப்பட்டவரைப் போல் நடத்தையை வெளிப்படுத்தியுள்ளார். இவர் இறுதியாக நாட்டின் உச்ச சட்டமான அரசமைப்பைக் குறைத்து மதிப்பிட்டுள்ளார்.

'மொட்டுக்கு வாக்களிக்க வேண்டாம்' எனக் கடுமையாகக் கண்டித்து தனது கருத்தைத் தேசிய பத்திரிகைகள் மற்றும் பல மின்னணு ஊடகங்களுக்கு அறிக்கையாக ஹூல் வெளியிட்டுள்ளார்.

இவர் தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினராக உள்ளார். ஆனால், தேர்தல்களை ஒத்திவைக்க வேண்டும் என வாதாட நீதிமன்றம் செல்வார்.

தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த தனது மகளைத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் வாகனத்தில் இவர் அழைத்துச் சென்று சட்டத்தை மீறியுள்ளார். இது நெறிமுறையற்ற செயல்முறையை மேலும் தீவிரப்படுத்துகின்றது.

சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவையும், அதை நியமித்த அரசமைப்புப் பேரவையையும், அரசமைப்புப் பேரவையால் நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத்தையும், இந்த நாட்டின் அரசமைப்பையும் குறை மதிப்புக்கு உட்படுத்தும் வகையில் பணியாற்றிய ரட்ணஜீவன் ஹூலுக்கு எதிராக அரசமைப்புப் பேரவையின் தலைவரான சபாநாயகர் கரு ஜயசூரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார்.

## ஹூல் குறித்து அறிக்கை கேட்கிறது அரசமைப்புப் பேரவை

கொழும்பு, ஜூன் 8

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர் பேராசிரியர் ரட்ணஜீவன் ஹூல் தொடர்பில், அரசமைப்புப் பேரவை அறிக்கை கோரியுள்ளது.

தேர்தல் ஆணைக்குழு மற்றும் நாடா ளுமன்ற செயலாளர் நாயகம் ஆகியதரப்புக்களிடமிருந்து பேராசிரியர் ஹூல் தொடர்பில் பேரவையின் தலைவர் சபாநாயகர் கரு ஜெயசூரிய இந்த அறிக்கையைக் கேட் டுள்ளார்.

பேராசிரியர் ஹூல் ஊடகங்களில் சர்ச்சைக்குரிய கருத்துக்கள் வெளியிட்டு வருகிறார் எனவும், அவர் பக்கச் சார்பாக செயற்பட்டு வருகிறார் எனவும் அரசமைப்புப் பேரவையின் தலைவர் கரு ஜயசூரியவுக்கு செய்யப்பட்ட முறைப்பாட்டை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து பேராசிரியர் ஹூல் தொடர்பில் இரண்டு அறிக்கைகளை கரு ஜயசூரிய கோரியுள்ளார்.

## ஓகஸ்ட் முதல் சர்வதேச விமானப் போக்குவரத்து

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் பயணிகள் போக்குவரத்துக்காக மீண்டும் திறப்பதற்கு ஆட்சியாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

கொரோனா பெருந்தொற்றுக் காரணமாகக் கடந்த மார்ச் மாத இறுதிப் பகுதியில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டது.

வெளிநாடுகளில் சிக்கிக்கொண்டிருந்த இலங்கையர்களை அழைத்து வருவது மற்றும் இலங்கையில் சிக்கிக்கொண்டிருந்த வெளிநாட்டவர்களை அனுப்பி வைப்பது போன்ற பயணங்களுக்கு மட்டுமே இந்த இடைப்பட்ட காலத்தில் விமான நிலையம் அத்தியாவசிய சேவைகளை வழங்கி வந்தது.

கொரோனா பெருந்தொற்று முடக்க நிலையில் இருந்து நாடு மெல்ல இயல்பு நிலைக்குத் திரும்பி வருவதால் ஓகஸ்ட் மாதம் முதல் சர்வதேச விமானப் போக்குவரத்தையும் தொடங்குவதற்கு ஆட்சியாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

ஓகஸ்ட் மாதம் முதல் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை நாட்டுக்குள் அனுமதிப்பதற்கும் தனிமைப்படுத்தல் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப அதைச் செய்வதற்கும் ஆட்சியாளர்கள் ஏற்கனவே தீர்மானம் எடுத்துள்ளனர்.

# வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு சிறப்புச் சலுகை வழங்கப்படாது

## அமைச்சர் தினேஷ் கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 08

வெளிநாட்டு இராஜதந்திரிகள் எவருக்கும் தற்போதைய நிலையில் சிறப்பு சலுகை வழங்க வேண்டிய தேவை இலங்கை அரசுக்கு கிடையாது என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

கொழும்பில் இன்று திங்கட்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது –

ஜனாதிபதித் தேர்தலில் பொதுஜன பெரமுனவுக்கு கிடைக்கப் பெற்ற மக்கள் ஆணையைத் தொடர்ந்து முன்னெடுத்து செல்வது பிரதான பொறுப்பாக உள்ளது.

நீதிமன்றம் கலைக்கப்பட்டமை மற்றும் பொதுத்தேர்தலை ஜூன் மாதம் 20ஆம் திகதி நடத்துவதற்கு எதிராகவும் எதிர் தரப்பினர் நீதிமன்றில் மனுத் தாக்கல் செய்தார்கள்.

எனினும் நீதிமன்றம் மக்களின் ஜனநாயக உரிமையைப் பாதுகாக்கும் பொருட்டு தாக்கல் செய்த மனுக்களை இரத்துச் செய்தது. சுகாதாரப் பிரிவின் அறிவுறுத்தல்களுக்கு அமைய கடுமையான பாதுகாப்புக்கு மத்தியில் பொதுத் தேர்தலை நடத்துவது அரசில் நோக்கமாகும்.

அத்தோடு, விமான நிலையத்தில் பி.சி.ஆர். பரிசோதனையை நிராகரித்த அமெரிக்க இராஜதந்திரி தொடர்பாக மாறுப்பட்ட கருத்துக்கள் அரசியல் மட்டத்தில் குறிப்பிடப்படுகின்றன. அரசு அமெரிக்காவுக்கு சிறப்பு சலுகையை வழங்கவேண்டிய தேவை கிடையாது.

வியன்னா ஒப்பந்தத்தின் பிரகாரம் குறித்த அமெரிக்க இராஜதந்திரி பி.சி.ஆர். பரிசோதனையைப் புறக்கணித்தமை தவறான செயற்பாடு.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த அரசு முன்னெடுக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளை நாட்டுக்குள் வரும் வெளிநாட்டு இராஜதந்திரிகள், மற்றும் தூதுவர்கள் கடுமையாக பின்பற்ற வேண்டும் என இலங்கையில் உள்ள அனைத்து தூதரகங்களுக்கும் விசேட சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளன – என்றார்.

# தமிழகத்துக்கு ஆபத்து! புதுக் கொரோனா பரவல்



தமிழகத்தில் புதிய வகைக் கொரோனா வைரஸ் பரவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த மார்ச் மாதம் முதல் அங்கு வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரசில் ஏ1, ஏ2, ஏ3, பி1, பி2 உள்ளிட்ட வகைகள் உள்ளதாகவும் அதற்கேற்றவாறு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சூழலில், கொரோனா வைரசில் சில மாற்றங்கள் ஏற்பட்டு Gland A 13 i என்ற புதிய வகை வைரஸ் பரவி வருவது தெரியவந்துள்ளது. மற்றைய வகை வைரஸ்களைக் காட்டிலும் இது தீவிரத் தன்மை கொண்டது என்றும் தமிழகம் தவிர தெலங்கானா, ஆந்திரா ஆகிய மாநிலங்களிலும் இந்த வகை வைரசின் தாக்கம் இருப்பதாகவும் சுகாதாரத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதே சமயம் இதைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருவதாகவும் அவர்கள் தெரிவித்தனர். இந்த வகை வைரஸ்கள் மகாராஷ்டிரா மாநிலத்திலிருந்து பரவி இருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

கேரளாவில் ஆரம்பத்தில் உறுதிசெய்யப்பட்ட கொரோனா வைரஸ் இந்த ஆண்டின் தொடக்கத்தில் சீனாவின் வுஹான் மாகாணத்தில் உறுதி செய்யப்பட்ட கொரோனா வைரஸை ஒத்துள்ளது என்றும் இந்தப் புதிய வகை வைரஸ் சீனாவில் அல்லாமல் தென்கிழக்கு ஆசியாவில் எங்காவது தோன்றியிருக்கலாம் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# நியூஸிலாந்துக்கு விடுதலை வழங்கியது கொரோனா!



நியூஸிலாந்தில் கொரோனாத் தொற்றுக்கு இலக்காகிச் சிகிச்சைபெற்றுவந்த இறுதி நபரும் குணமடைந்து வீடுதிரும்பியுள்ளதால் அந்த நாடு கொரோனாவிடமிருந்து விடுதலை பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்மூலம் நியூஸிலாந்து கொரோனா இல்லாத நாடாக மாறியுள்ளது, எதிர்காலத்தில் தமது நாட்டுக்குள் கொரோனா வராது என்று நம்புவதாக அந்த நாட்டின் தலைமை அமைச்சர் ஜெசிந்தா ஆர்டெர்ன் நம்பிக்கை தெரிவித்தார்.


நியூஸிலாந்தில் கடந்த மார்ச் மாதத்தில் ஆயிரத்து 500 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட 22 பேர் உயிரிழந்தனர்.

தீவு நாடாக இருப்பதால் அந்த நாட்டு அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் கொரோனா காப்பு நடவடிக்கைகளையும் முன்னெடுத்தது.

நியூஸிலாந்தில் கடந்த 20 நாள்களுக்கு முன்னர் ஒருவர் கொரோனாவால் பாதிக்கப்பட்டார். அவரே நியூஸிலாந்தில் கொரரோனாத் தொற்று இறுதியாக அடையாளம் காணப்பட்ட நபர். சிகிச்சையளிக்கப்பட்டு வந்த நிலையில் அவரும் குணடைந்தார்.

இதன்மூலம் கொரோனா வைரஸ் இல்லாத நாடாக நியூஸிலாந்து மாறியது.

# ட்ரம்ப்பின் நன்றியால் வந்த வினை!




அமெரிக்காவின் தலைநகர் வொஷிங்டனில் போராட்டக்காரர்களைக் காணமுடியவில்லை. பொலிஸாருக்கு நன்றி என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்த மறுநொடியில் வோஷிங்டன் நகரில் போராட்டக்காரர்கள் பெருமளவில் குவிந்த சம்பவம் நடந்துள்ளது.

இது குறித்துத் தெரியவருவதாவது:–

அமெரிக்காவில் கறுப்பினத்தவரான ஜோர்ஜ் ஃபிளாய்ட் கொல்லப்பட்ட சம்பவம் உலகம் முழுவதும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் அமெரிக்காவில் மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அமெரிக்காவின் தலைநகர் வொஷிங்டனிலும் பெருமளவில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்த நிலையில், எதிர்பார்த்ததை விட வொஷிங்டனில் மிகக் குறைந்த போராட்டக்காரர்கள் காணப்படுகிறார்கள்.

பொலிஸார், புலனாய்வுத் துறையினர் உட்படப் பலரும் அருமையாகப் பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்கு நன்றி! என்று ட்ரம்ப் தன்னுடைய கீச்சகப் பக்கத்தில் பதிவிட்டார். அவர் அவ்வாறு பதிவிட்ட மறுநொடியே வொஷிங்டனில் பல்லாயிரக் கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட் டத்தில் ஈடுபட்டனர், இது ஃபிளாய்ட் இறந்த பின்பு வொஷிங்டன் நகரத்தில் நடந்த மிகப்பெரிய போராட்டம் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

# சீனாவை வேகமாக முந்தியது இந்தியாவின் தனி ஒரு மாநிலம்

கொரோனா வைரஸின் தோற்றுவாய் என்று கருதப்படுகின்ற சீனாவை விட இந்தியாவின் மாநிலம் ஒன்றில் கொரோனாத் தொற்று அதிகமாகியுள்ளது.

இந்தியாவில் கொரோனா தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 7ஆயிரத்து 207 ஆக அதிகரித்துள்ளது. இந்த நிலையில் இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் மட்டும் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 85ஆயிரத்து 975ஆக அதிகரித்துள்ளது. சீனாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 83ஆயிரத்து 40பேர். இதனால் சீனாவை விட மஹாரஷ்டிராவில் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது.

இதுவரை மகாராஷ்டிராவில் 2ஆயிரத்து 969 பேர் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். உலகளவில் கொரோனாவால் பாதிக்கப்பட்ட நாடுகளின் வரிசையில் இந்தியா 2இலட்சத்து 58ஆயிரத்து 90பேருடன் 6ஆவது இடத்தில் உள்ளது.

இந்தியாவின் தலைநகர் டெல்லியில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், நோயாளிகளுக்குத் தேவையான எண்ணிக்கையிலான படுக்கை வசதிகள் பல மருத்துவமனைகளில் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன.

# மினியாபோலிஸ் நகரத்திலிருந்து பொலிஸாரை நீக்குவதற்கு முடிவு

ஜோர்ஜ் ஃபிளாய்ட் கொல்லப்பட்ட விவகாரம் அமெரிக்கா முழுதும் போராட்டத்தைத் தூண்டி உள்ள நிலையில், அவர் கொல்லப்பட்ட மினியாபோலிஸ் நகரிலிருந்து பொலிஸ் நிலையங்கள் கலைக்கப்பட உள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவின் மின்னசோட்டா மாநிலம், மினியாபோலிஸ் பொலிசாருக்கு ஏற்பட்டுள்ள களங்கத்தைப் போக்கும் வகையில், மினியாபோலிஸ் பொலிஸ் துறை கலைக்கப்பட்டு மீண்டும் கட்டமைக்கப்படும் என்று நகர ஆட்சியாளர்கள் தெரிவித்தனர்.

இதன் மூலம் சமூகப் பாதுகாப்பின் புதிய மாதிரியை உருவாக்க உள்ளதாக மினியாபோலிசின் நகராட்சித் தலைவர் லிசா பெண்டர் தெரிவித்தார்.

# தலித் சுட்டுக் கொலை!

சிலரின் எதிர்ப்பை மீறிக் கோவிலுக்குள் கால் பதித்த 17 வயதுடைய இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று சாவடைந்த இளைஞனின் தந்தை தெரிவித்தார்.

இந்தியாவின் உத்தரப் பிரதேசத்தில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:-

உத்தரப்பிரதேசத்தின் மேற்குப் பகுதியில் அமைந்துள்ள அம்ரோஹா மாவட்டத்திலுள்ள தும்காரா கிராமத்தில் வசிக்கும் 17 வயதுடைய விகாஸ் குமார் ஜாதவ் (தலித் என்று கூறப்படுகிறது) என்பவர் குறித்த கிரமத்தின் மையப்பகுதியில் வசிக்கும் சிவன் கோயிலுக்குக் கடந்த 1ஆம் திகதியன்று வழிபடச் சென்றபோது ஹோராம் சவுகான் (உயர்சாதியைச் சேர்ந்தவர் என்று அடையாளப்படுத்தப்படுகிறார்) என்பவர் விகாஸ் குமாரைத் தடுத்துள்ளார்.

அதைப் பொருட்படுத்தாத விகாஸ் குமார் கோயிலில் நுழைந்து வழிபட்டுள்ளார். வழிபாடு முடித்து வெளியில் வந்த விகாஸை ஹோராமுடன் சேர்ந்து மேலும் சிலர் தாக்கி உள்ளனர். இது குறித்து அந்தப் பகுதிப் பொலிஸ் நிலையத்தில் விகாஸ் குமாரின் தந்தை முறைப்பாடளித்துள்ளார்.

ஆனால் அந்த முறைப்பாட்டைப் பொலிஸார் ஏற்கவில்லை. இந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு வீட்டில் படுத்திருந்த விகாஸ் குமாரை ஹோராம் தலைமையில் புகுந்த குழுவினர் தாக்கினர்.

பிறகு ஹோராம் தன்னிடம் இருந்த துப்பாக்கியால் விகாஸ் குமாரைச் சுட்டுக் கொன்றார் என்று விகாஸ் குமாரின் தந்தை தெரிவிக்கிறார்.

கோயில் நுழைவு மற்றும் வன்கொடுமை ஆகியதால் இந்த மோதல் ஏற்பட்டதாக விசாரணைகளில் இருந்து ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை. குற்றவாளிகளை விரைவில் கைது செய்வோம்.” என்று பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சேவல் கத்தியால் குத்தி இளைஞர் பரிதாபச் சாவு

## சேவல் சண்டையின்போது துயரம்



இந்தியாவின் கரூர் மாவட்டம் அருகே நடந்த சேவல் சண்டையில் சேவலின் காலில் கட்டியிருந்த கத்தி குத்தி இளைஞர் சாவடைந்துள்ளார். இந்தச் சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது:–

கரூர் மாவட்டத்திலுள்ள சின்னமுத்தாம்பாளையம் நடுக்கல்குட்டையில் சேவலின் காலில் கத்தியைக் கட்டி சேவல் சண்டை நடத்தப்பட்டுள்ளது. இதில் மேல்நெடுஞ்கூரை சேர்ந்த முருகேசன் (வயது30) என்ற இளைஞன் சேவல்களை சண்டைக்கு விடும் பொறுப்பில் இருந்துள்ளார்.

சேவல்கள் காலில் கத்திகளைக் கட்டியவாறு சண்டைக்கு விடப்பட்டுள்ளன. அப்போது ஒரு சேவலின் காலில் கட்டியிருந்த கத்தி முருகேசனின் தொடையில் குத்தியது.

இதனால் அதிகளவு குருதி வெளியேறியுள்ளது. கரூர் அரசு மருத்துவக் கல்



லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்குக் கொண்டு சென்ற முருகேசனைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர்.

இதுதொடர்பாக 5 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்தச் சேவல் சண்டை சட்டவிரோதமாக நடத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.




# ‘மீண்டும் கூடாதீர்’ எச்சரிக்கையை மீறி லண்டனில் மீண்டும் பெரும் போராட்டம்

மீண்டும் கூடாதீர்கள் என்ற பொலிஸாரின் எச்சரிக்கையையும் மீறி லண்டனில் பெரும் எண்ணிக்கையானவர்கள் நேற்று வீதிகளில் திரண்டு மீண்டும் போராட்டம் நடத்தினர்.

அமெரிக்காவில் கறுப்பினத்தவரான ஜோர்ஜ் ஃபிளாய்ட் கொல்லப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பிரிட்டனின் தலைநகர் லண்டனில் நடந்த இரண்டாவது போராட்டம் இது.

இந்தப் போராட்டத்தில் பல்லாயிரக்கணக்கானவர்கள் பங்கேற்றனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. கடந்த சனிக்கிழமை லண்டனில் நடந்த போராட்டத்தில் பொலிஸாருடன் போராட்டக்காரர்கள் சிலர் மோதினர். இதனால் பொலிஸார் பலர் காயமடைந்தனர். கொரோனா அபாயம் நீடிப்பதால் மீண்டும் லண்டனில் கூடக்கூடாது என்று பொலிஸார் வலியுறுத்தினர். இந்த நிலையில் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தேம்ஸ் நதியின் தென் கரையில் உள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு வெளியேயுள்ள வீதியில் பல்லாயிரக் கணக்கான மக்கள் கூடிப் போராட்டத்தில் ஈடுபட்டனர். பின்னர் அவர்கள் நாடாளுமன்றம் நோக்கி அணிவகுத்துச் சென்றனர். ’இனவெறி ஒரு வைரஸ்’ என்று போராட்டக்காரர்கள் கோஷமெழுப்பினர். இனவெறி எதிர்ப்புப் போராட்டங்கள் கொரோனா வைரஸ் பரவுவதற்கான அபாயத்தை அதிகரிக்கின்றன என்று பிரிட்டனின் சுகாதார அமைச்சரும், அமைதியாக எதிர்ப்புத் தெரிவிப்பதற்கு மக்களுக்கு உரிமை உண்டு என்று பிரிட்டனின் தலைமை அமைச்சர் போரிஸ் ஜோன்சனும் தெரிவித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நீங்கள் விடுவித்தால் நாங்களும் செய்வோம்

### அமெரிக்காவுக்குச் சொல்கிறது ஈரான்



அமெரிக்காவுடன் கைதிகளைப் பரிமாறிக்கொள்வதற்கு ஈரான் தயாராக உள்ளது என்று ஈரானின் வெளியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் அப்பாஸ் சவி தெரிவித்தார். 2018 ஆம் ஆண்டிலிருந்து ஈரானில் தடுத்து வைக்கப்பட்டிருந்த அமெரிக்கக் கடற்படைச் சிப்பாயான மைக்கல் வைட், கடந்த வியாழக்கிழமை விடுவிக்கப்பட்டார், அதற்குப் பிரதியுபகாரமாக அமெரிக்காவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஈரானிய - அமெரிக்க மருத்துவர் மஜித் தாஹேரியையும் ஈரானியப் பேராசிரியரான சிரஸ் அஸ்காரியையும் ஈரானுக்குச் செல்வதற்கு அமெரிக்கா அனுமதித்தது. இந்த நிலையிலேயே ஈரானின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. கைதிகளைப் பரிமாறிக்கொள்வதற்கான சாத்தியம் இருந்தால், அமெரிக்காவில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீதமுள்ள நபர்களை விடுவித்தால் இங்கு சிறையில் உள்ளவர்களைத் திருப்பி அனுப்புவதற்குத் தயாராக உள்ளோம் என்று அப்பாஸ் சவி கூறியுள்ளார். அமெரிக்கா - ஈரான் இடையே நீடித்து வந்த முறுகல் நிலை தற்காலத்தில் தணிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மூளையை அறுக்கும்போது ‘செல்பி’



பிரிட்டனில் மூளைக்கட்டியால் அவதிப்பட்டுச் சிகிச்சைபெற்றுவந்த நபரொருவர் தான் அறுவைச் சிகிச்சையிலுள்ளதைச் செல்பி எடுத்து வெளியிட்டுள்ளார். ஜிம் மர்பி என்ற அந்த நபர் அதைத் தனது சமூகவலைத்தளத்தில் பகிர்ந்துள்ளார். இது குறித்து மேலும் தெரியவருவதாவது:

ஜிம் மர்பி என்ற 54 வயதுடைய குறித்த நபர், மூளைக்கட்டியால் அவதிப்பட்டு மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். அவருடைய மூளைப்பகுதியில் 5 மணி நேரத்துக்கு மேலாக அறுவை சிகிச்சை நடந்தது. அந்த அறுவைச் சிகிச்சையை அவர் தனது அலைபேசியில் ’செல்பி’ எடுத்து அதைத் தனது ’வட்ஸ் - அப்’ பக்கத்தில் பகிர்ந்துள்ளார். இதுபற்றி அவர் கூறுகையில், ’அறுவைச் சிகிச்சையின் போது நம்பிக்கையாகவும், தைரியமாகவும் இருக்க வேண்டும் என்று நான் முடிவு செய்தேன். அதனால் விழித்திருந்தேன். அறுவைச் சிகிச்சையை நான் ரசித்தேன். அறுவை சிகிச்சை கருவிகளின் சத்தத்தை மூழ்கடிக்க நான் இசை கேட்டேன். நண்பர்களுடன் பேசினேன்’ என்றார்.

### பொருளாதாரத்தில் வடகொரியா

## தன்னிறைவில் அக்கறை காட்டுமாறு கிம் பணிப்பு

வட கொரியாவின் தலைவர் கிம் ஜோங் உன் அண்மையில் நடந்த கூட்டத்தில் தன்னிறைவுப் பொருளாதாரத்தை வலியுறுத்தினார்என்றுவடகொரிய ஊடகங்கள்செய்திவெளியிட்டன. வடகொரியாவின் ஆளும் தொழிலாளர் கட்சியின் கூட்டத்திலேயே கிம் ஜோங் உன் இவ்வாறு தெரிவித்துள்ளார். உள்நாட்டுப் பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்து அந்தக் கூட்டத்தில் கிம் ஆராய்ந்தார் என்று கூறப்படுகிறது. கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் வடகொரியாவில் பொருளாதார நிச்சயமற்ற நிலை எழுந்துள்ளது. அணுசக்தித் திட்டத்தை நிறுத்துவதை நோக்கமாகக் கொண்டு முன்னதாகவே வடகொரியா மீது விதிக்கப்பட்டுள்ள ஏகப்பட்ட பொருளாதாரத் தடைகளால் பாதிக்கப்பட்டுள்ள வடகொரியா உலக நாடுகளில் இருந்து சற்று விலகித் தனிமைப்பட்டே இருந்து வருகிறது. வடகொரியாவில் கொரோனா பரவலின் நிலை குறித்த செய்திகள்கூடப் பொதுவெளியில் அதிகம் சிலாகிக்கப்படுவதில்லை. இந்த நிலையில் கிம் தன்னிறைவுப் பொருளாதாரம் குறித்து அக்கறை கொள்ளுமாறு வலியுறுத்தத் தொடங்கியிருக்கிறார். இது அமெரிக்கா தலைமையிலான ஆதிக்க நாடுகளின் ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும், வடகொரியாவின் துணிச்சலான தனித்த போக்குக்கும் அடித்தளமிடும் செயல்முறை என்று பன்னாட்டு அரசியலவதானிகள் தெரிவிக்கின்றனர்.

### கொரோனா முடக்கத்தில் இருந்து

## படிப்படியான தளர்வே சிறந்தது ஆராய்ச்சி முடிவுகள் தெரிவிப்பு

கொரோனா தொற்றுப் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்குப் பெரும்பாலான நாடுகளில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது பல நாடுகள் ஊரடங்கை படிப்படியாகத் தளர்த்தி வருகின்றன. இந்த நிலையில் இந்த ஊரடங்குத் தளர்வு தொடர்பாகப் பல்கலைக் கழகங்கள் சில நடத்திய ஆய்வு முடிவுகள் வெளியாகியுள்ளன. அந்த ஆய்வில் உலகம் முழுதும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதால் பொருள் விநியோகச் சங்கிலி தடைப்பட்டுள்ளது.

இது தொடர்பாக 140 நாடுகளில் ஆய்வு நடத் தப்பட்டது. நீண்ட கால ஊரடங்கின் விளைவால் தொழில் துறை வழக்கத்துக்குத் திரும்புவதற்குக் கால அவகாசம் தேவைப் படும். இதனால் படிப்படியான தளர்வுகள் தேவை. இந்தத் தளர்வுகள் மூலம் உள்நாட்டு, பன்னாட்டு அளவில் பொருள் விநி யோகச் சங்கிலி தொடர வழிவகுக்கும். அத்தோடு சுற்றுலாத் துறையை பெரிதும் சார்ந்துள்ள கரீபியன் நாடுகள், மத்திய ஆசிய நாடுகள் மற்றும் எரிசக்தியை சார்ந்துள்ள நாடுகள், ஏற்றுமதியைப் பெரிதும் சார்ந்துள்ள நாடுகள் சந்திக்கின்ற பாதிப்புகள் குறை யும். இதனால் ஊரடங்கைப் படிப்படியாக விலக்கிக் கொள்வது தான் பொருளாதாரச் சிக்கலில் இருந்து மீள்வதற்கு உள்ள ஒரே வழி. அதன் மூலம்தான் அறுபட்டு போன விநியோக சங்கிலியை மீட்டு பழைய நிலைக்கு கொண்டு வரமுடியும் என்று தெரிவிக்கப்படுகிறது.

# தேர்தலால்தான் கொரோனா பரவியது என்று சொல்லாத வகையில் அதை நடத்தவேண்டும்

## இதுவே எதிர்பார்ப்பு என்கிறார் ஆணையாளர் தேசப்பிரிய



கொழும்பு, ஜுன் 8

தேர்தலை நடத்தியதால்தான் கொரோனா பரவியது என்று எதிர்காலத்தில் சொல்ல முடியாத அளவிற்கு முன்னேற்பாடுகளுடன் தேர்தலை நடத்தவேண்டும் என்பதே தமது நோக்கம் என்று தெரிவித்தார் தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரிய.

பரீட்சார்த்த தேர்தல் வாக்களிப்பு முடிந்த பின்னர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சுகாதார முன்னேற்பாடுகளுடன் தேர்தலை நடத்துவதானால் அதற்கு அதிகளவில் செலவாகுமே என்று கேட்கப்பட்ட ஒரு கேள்விக்குப் பதிலளித்த மகிந்த தேசப்பிரிய, கொவிட் 19 நிலைமை கட்டுப்படுத்தப்பட்டுள்ள சூழலில் மக்களின் ஜனநாயக உரிமையை பாதுகாத்து தேர்தலை நடத்துவதற்கான ஏதுநிலைமைகள் குறித்து ஆராய்வதே தமது கடமை. மாறாக தேர்தலை நடத்த எவ்வளவு செலவாகும் என்பதை மதிப்பிடுவது அல்ல எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனநாயகத்தின் விலையை மதிப்பிட முடியாது. அதனை இலாபமாக பெறமுடியாது. பல உயிர்களைப் பலி கொடுத்தே ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

# அன்றாடப் பிரச்சினையை விட்டுவிட்டு இராணுவ ஆட்சி மீதே அரசின் கவனம்

## சாடுகின்றது ஐக்கிய மக்கள் சக்தி

கொழும்பு, ஜுன் 8

மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் மீது அக்கறை எடுக்காமல் இராணுவ ஆட்சியை நிலைநிறுத்துவதன் மீதே ஆட்சியாளர்கள் அதிக கரிசனை காட்டி வருகின்றார்கள் என்று தெரிவித்துள்ளது எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி.

மக்கள் மீது எந்த அக்கறையும் இன்றி செயற்படுகின்றார்கள் ஆட்சியாளர்கள். நாட்டில் பசளைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பொருட்களின் விலை அதிகரிப்பு, ஒழுங்கான வருமானம் இன்மை, தொழில் வாய்ப்பு இன்மை போன்றவற்றுடன், ஏற்கனவே இருந்த தொழிலும் சிலருக்கு இல்லாமல்போயுள்ள நிலை, இவை எது பற்றியும் ஆட்சியாளர்களுக்குச் சிந்தனையில்லை. மக்களுக்கான சலுகைகளை பெற்றுக்கொடுப்பது தொடர்பாகச் சிந்திக்காது இராணுவ ஆட்சியை முன்னெடுப்பது தொடர்பிலே அக்கறை செலுத்தி வருகின்றது என்று தெரிவித்தார் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் சட்டத்தரணி சிறால் லத்திலக்க.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது: –

ஆட்சியாளர்கள் மக்கள் மீது எந்தவித அக்கறையும் இன்றிச் செயற்படுகின்றனர்.

இந்த நிலையில் எமது தனிப்பட்ட தகவல்கள் அனைத்தையும் தற்போது பொலிஸார் சேகரித்து வருகின்றனர். அந்தத் தகவல்களை ஆணைக்குழுவிடம் கையளித்து பாதுகாப்பாகப் பேணுவதை விடுத்து, அவற்றை வைத்துப் பழிவாங்கலில் ஈடுபடக்கூடாது.

இதேவேளை, பொதுத்தேர்தலை கண்காணிப்பதற்காக ஜனாதிபதி செயலணியின் உறுப்பினர்களை நியமிக்க போவதாக அரசு அறிவித்துள்ளது. இது ஜனநாயக தன்மைக்கு முரணான செயற்பாடாகும். இது சாதாரண வாக்களிப்பு செயற்பாடுகளுக்கு சிக்கலை தோற்றுவிக்கக்கூடும்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை இந்த ஆட்சியாளர்களால் வெற்றி கொள்ளமுடியும் என்று ஆளும் தரப்பினர் தெரிவித்து வருகின்றனர். இது ஒருபோதும் சாத்தியமாகாது. அரசின் நிலையும் எதிர்க்கட்சியின் நிலையும் சமாந்தரமாகவே இருக்கின்றது. இந்த நிலையில் ஆட்சியாளர்களுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொள்வது என்பது முடிந்த காரியமல்ல.

இதேவேளை சுகாதார நெருக்கடிக்கு மத்தியில் தேர்தலை நடத்துவதால் வாக்களிப்பு வீதம் குறைவடைவதற்கான வாய்ப்புகளே இருக்கின்றன.

ஆட்சியாளர்கள் மக்கள் மத்தியில் விரைவில் தேர்தலை நடத்த வேண்டும் என்று தெரிவித்து வந்தாலும் ஆளும் தரப்பில் சிலர் தேர்தலை புறக்கணிக்க முயற்சிக்கின்றனர்.

இவ்வாறான நிலையில், இதனூடாக மிக பயனடையக்கூடியவர்கள் யார் என்பது தொடர்பாக மக்கள் நன்கு சிந்தித்துத் தீர்மானம் எடுக்க வேண்டும். தொடர்ந்தும் இராணுவ ஆட்சியை நிலைநாட்டும் எண்ணத்திலேயே இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன – என அவர் மேலும் தெரிவித்தார்.

# யக்கல விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஜுன் 8

கொழும்பு – கண்டி பிரதான வீதியில் யக்கல பொலிஸ் நிலையத்திற்கு முன்னால் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 11 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த 'கெப்' ரக வாகனம் ஒன்றும் எதிர்திசையில் வந்த லொறி ஒன்றும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் சிக்கிய லொறி அதன் பின்னர் பொலிஸ் 'கெப்' ரக வாகனம் ஒன்றுடனும் மூன்று முச்சக்கரவண்டிகளுடனும் மோதியது.

இந்த விபத்தில் கடும் காயமடைந்த 35 வயது நபர் கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

# இன்று முதல் 100 பேர் தேர்தல் கண்காணிப்பில்

கொழும்பு, ஜுன் 8

தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியில் வேட்பாளர்கள், கட்சிகளின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்காக 100 கண்காணிப்பாளர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர்.

இன்று திங்கட்கிழமை முதல் அவர்கள் தமது கண்காணிப்பு நடவடிக்கையைத் தொடங்கவுள்ளனர் என்று தேர்தல் வன்முறை கண்காணிப்பு மையம் தெரிவித்தது.

தேர்தல்கள் ஆணைக்குழுவால் தேர்தல் தினம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்ட பின்னர், மற்றுமொரு பகுதியினர் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என அதன் இணைப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்தார்.

# பூசா சிறையின் பாதுகாப்பை அதிகரிப்பதற்குத் தீர்மானம்

கொழும்பு, ஜுன் 8

பூசா சிறைச்சாலையில் சிறப்பு அதிரடிப் படையினரின் பாதுகாப்பை மேலும் அதிகரிக்கத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்பு செயலாளர், பதில் பொலிஸ்மா அதிபர், சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ஆகியோர் நேற்று ஞாயிற்றுக்கிழமை சிறைச்சாலைக்கு நேரில் வருகை தந்து நிலைமைகளைப் பார்வையிட்ட பின்னர் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது என்று சிறைச்சாலை நிர்வாகம் தெரிவித்தது.

போதைப்பொருள் குற்றங்களில் தண்டனை பெற்றவர்கள் உட்பட கடுமையான குற்றங்களுக்காகத் தண்டனை பெற்ற குற்றவாளிகளை பூசா சிறைக்கு மாற்றுவது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

இதனாலேயே சிறைச்சாலையின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

சிறைச்சாலையில் மறைகாணிகளை (சி.சி.ரி.வி.) பொருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

பெருந்தெரு



16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

நாளைய (09.06.2020) தலைப்பு பெருந்தெரு

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623









# அம்பாறையில் 'கொவிட் கெத்து' அணியினரின் நிவாரண சேவை!

கொரோனாத் தொற்றால் முடங்கியுள்ள மக்கள் பசியால் பாதிக்கப்பட்டிருப்பதை அறிந்து ஊரடங்குச் சட்டத்துக்'கு மத்தியில் அம்பாறை மாவட்டத்தில் ஒரு குழுவினர் கடந்த 76 நாள்களாக உலருணவு நிவாரணங்களை வழங்கிவருகின்றனர். மார்ச்மாதம் 20ஆம் திகதியில் இருந்து இவ்வாறு சேவையில் ஈடுபட்டுவருகின்ற 'கொவிட் கெத்து' என்ற பெயருடைய அணியினர் தொடர்ந்து இந்தப் பணியில் ஈடுபடுதைப் பலரும் பாராட்டுகின்றனர். இந்த அணியினரின் நிவாரண சேவை மலையகம் வரை பரந்துள்ளது. பதுளை மாவட்டத்திலுள்ள லுணுகல சோலன்;ஸ் மற்றும் சுவிங்ரன் தோட்ட மக்களுக்கு 250 உலருணவுப் பொதிகளை இவர்கள் வழங்கினர். வசீகரன் அறக்கட்டளை நிதியம் நிதியுதவி வழங்கியுள்ளது. அத்தோடு லண்டன் சைவமுன்னேற்றச்சங்கம், சுவிஸ்சூரிச்'அன்பேசிவம்' பிரிட்டன் 'சிவகாமி அறக்கட்டளை நிதி



யம்', அசிசிஸ்ற் ஆர்.ஆர் அமைப்பு வசீகரன் அறக்கட்டளை நிதியம், பிரிட்டன் சைவத் திருக்கோயில்கள் ஒன்றியம், கனடா அகவம் அமைப்பினர், கதிர்காம பாதயாத்திரீகர் மணிவாசகர் லண்டன், அகிலன் பவுண்டேசன் நிறுவனம் ஆகிய அமைப்புகள் நிதியுதவிகள் வழங்கின.



### உதவியளிக்கப்பட்ட பகுதிகள்

இந்த அணியினரால் அம்பாறை மாவட்டத்திலுள்ள வளத்தாப்பிட்டி பளவெளி, புதிய வளத்தாப்பிட்டி, அட்டப்பள்ளம், திராய்க்கேணி, காரைதீவு, கோரக்கர் கிராமம், வீரச்சோலை, மண்டானை, காயத்ரி கிராமம், மத்திய முகாம், சவளக்கடை. கோபாலபுரம் 7ஆம் கிராமம், நாவிதன்வெளி, அன்னமலை, சங்குமண்கண்டி, உமிரி சங்குமண்கிராமம், தங்கவேலாயுதபுரம், திருப்பதி, கஞ்சிக்குடிச்சாறு, மணற்சேனை, செல்வபுரம், கோமாரி, ஊறணி, கனகர்கிராமம், நேருபுரம், தாமரைக்குளம், வில்காமம், ஆலையடிவேம்பு, பனங்காடு, மளவராயன்கிராமம், நாவற்காடு, தம்பட்டை ஆகிய பின் தங்கிய பகுதிகளில் உலருணவு நிவாரணம் வழங்கப்பட் டது. இந்த நிவாரணசேவையை பிரதேச செயலர்களுடன் தொடர்புகளை வைத்து உரிய வாகன ஒழுங்குகளைச் செய்து முகாமைத்துவம் செய்வதவர் கல்வியியலாளர் வி.ரி.சகா தேவராஜா.

### குடிநீர்ப் பிரச்சினைக்கும் தீர்வு

உலருணவுக்கு அப்பால் திருக்கோவில் பிரதேசத்தில் கஞ்சிக்குடிச் சாறு பிரிவிலுள்ள மிகவும் பின்தங்கிய வில்காமம் கிராமத்தில் நீண்டகாலமாக நிலவிவந்த குடிநீர்ப் பிரச்சினைக்கு இந்தக் குழுவினரால் தீர்வு காணப்பட்டது.

அங்குசென்று நிவாரணம் வழங்கியபோது அங்கு நிலவுகின்ற குடிநீர்ப் பிரச்சினை தொடர்பாகத் தெரியப்படுத்தப்பட்டு அதற் குத் தீர்வு காணப்பட்டது.



பிரான்ஸில் வாழ்கின்ற பாண்டிருப்பைச் சேர்ந்தவர்களின் நிதிப்பங்களிப்பு காரணமாக ஆயிரம் லீற்றர் நீர்தாங்கிகள் இரண்டு சகல கட்டுமானங்களுடன் அங்கு வழங்கப்பட் டது.

அத்தோடு அங்குள்ள சேனைப்பயிர்ச் செய்கையாளர்களுக்கு நிவாரணப்பொதிகளும் வழங்கப்பட்டன.

### அறநெறி ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை

இந்த அணியினரால் பொத்துவில் ஊறணி அறநெறி ஆசிரியர்களுக்கு ஊக்குவிப்பு நிதியுதவியும் உலருணவுப் பொதிகளும் வழங்கிவைக்கப்பட்டன. அறநெறி மாணவர்க்கு மதிய உணவு வழங்கப்பட்டுக் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. குழந்தைகளுக்கான பால்மாவும் வழங்கப்பட்டது. அதுமட்டுமல்லாமல் பொத்துவில், ஊறணி, மணற்சேனை ஆகிய பகுதிகளில் உள்ள ஏழைத்தொழிலாளிகளினது உற்பத்திப்பொருள்களை நியாயமானவிலையில் கொள்வனவுசெய்து வாழ்வாதாரத்தை இழந்து நிற்கும் மக்களுக்கு இலவசமாக வழங்கினர். ஒருவகையில் இது இரட்டை நிவாரணமாகும்.

இச்செயற்றிட்டம் தொடர்ச்சியாக 5வது தடவையாக முன்னெடுக்கப்பட்டது. இத்திட்டம்பலராலும்வெகுவாகப்பாராட்டப்பட்டது. இந்தச் சேவையாளர்களின் சகல செயற்பாடுகளும் நாவிதன்வெளி பிரதேசசெயலர் எஸ்.ரங்கநாதன், ஆலையடிவேம்பு பிரதேசசெயலர் க.லவநாதன், அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வே.ஜெகதீசனின் ஒப்புதலுடன் சிறப்புற நடைபெற்றன.

---

பல்கலைக்கழகங்களில் கற்பித்தலை மீட்கும் வகையில்

# முதல் கட்டமாக மருத்துவ பீடங்களை திறக்க மானிய ஆணைக்குழு தீர்மானம்

கொரோனா பெருந் தொற்றுக் காரணமாக மூடப்பட்ட பல்கலைக்கழகங்களில் கல்விச் செயற்பாடுகளை படிப்படியாக மீண்டும் தொடங்குவதற்கு உரிய நடவடிக்கைகளை பல்கலைக்கழகங்களின் மானிய ஆணைக்குழு தொடங்கியுள்ளது.

கடந்த மாத இறுதியில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மற்றும் சுகாதாரத்துறை அதிகாரிகள் நடத்திய சந்திப்பில் எடுக்கப்பட்ட முடிவுக்கு அமைய இந்த நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

முதல் கட்டமாக மருத்துவ பீட இறுதி ஆண்டு மாணவர்களுக்கான வகுப்புகள் மட்டும் ஜூன் 15ஆம் திகதி தொடங்கப்படவுள்ளன.

இறுதி ஆண்டு மருத்துவ பீட மாணவர்களுக்கான பரீட்சைகளை நடத்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதால் அதற்கு அவர்களைத் தயார்ப்படுத்தும் வகையில் வகுப்புகளைத் தொடங்கத்தீர்மானிக்கப்பட்டுள்ளதுஎன்றுஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழங்கள் மீளத் தொடங்கப்படும்போது இறுதி ஆண்டு மருத்துவ மாணவர்களுக்கு விடுதி வசதிகள் வழங்கப்படவுள்ளன. ஓர் அறைக்கு ஒரு மாணவர் என்ற ரீதியில் இந்த வசதி வழங்கப்படும் எனத் தெரிவித்தார் பேராசிரியர் அமரதுங்க.

விடுதிகளுக்கு மாணவர்கள் வந்ததும் அவர்கள் இரண்டு வாரங்கள் தனிமைப்படுத்தப்பட்டப்படுவார்கள் என்றும் தெரிவித்தார். மருத்துவ பீடங்கள் மீண்டும் தொடங்கிய பின்னர் ஏற்படும் முன்னேற்றங்களை கருத்திற்கொண்டு இறுதி ஆண்டு மாணவர்களுக்கான பிற பீடங்களை மீண்டும் திறப்பது குறித்தும் தீர்மானிக்கப்படும் என ஆணைக்குழு தெரிவித்தது.

அந்த முடிவு தொடர்பான கலந்துரையாடல்கள் அனேகமாக இந்த மாத இறுதியில் இடம்பெறலாம் என்று கருதப்படுகின்றன.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# திடீரெனத் தீப்பிடித்து எரிந்த மோ. சைக்கிள்

## மட்டக்களப்பில் சம்பவம்



மட்டக்களப்பு, ஜூன் 08

மட்டக்களப்பில் ஓடிக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் திடீரென தீப்பற்றி எரிந்துள்ள நிலையில், அதனைச் செலுத்திச் சென்றவர் தெய்வாதீனமாக உயிர்தப்பியுள்ளார்.

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பார் வீதியில் உள்ள வேதாரணியம் சதுக்கம் பகுதியில் இந்த விபத்து இன்று திங்கட்கிழமை காலை இடம்பெற்றது.

ஏறாவூரில் இருந்து மட்டக்களப்பு ஊடாகக் காத்தான்குடி நோக்கிச் சென்றவரின் மோட்டார் சைக்கிளே இவ்வாறு திடீரெனத் தீ பிடித்துள்ளது.

மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவர் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார்.

அந்தப் பகுதியில் நின்றவர்களினால் மோட்டார் சைக்கிளில் பற்றிய தீ அணைக்கப்பட்டது.

இந்தத் தீ காரணமாக மோட்டார் சைக்கிளின் பெரும் பகுதி எரிந்து நாசமாகியுள்ளதுடன், இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# தீயில் பாதி கருகிய பெண்

## வவுனியா வைத்தியசாலையில்

*வவுனியா, ஜூன் 8*

*தீயில் பாதி உடல் எரிந்து ஆபத்தான நிலையில் இளம் குடும்ப பெண் ஒருவர் இன்று வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.*

*வவுனியா, மகாறம்பைக்குளம், ரம்பவெட்டி பகுதியைச் சேர்ந்த 29 வயதான பெண் ஒருவரே இவ்வாறு தீயில் கருகிக் காயமடைந்திருந்தார்.*

*அயலவர்களுடன்ஏற்பட்ட தகறாறில் இவர் மீது மண் எண்ணெய் ஊற்றப்பட்டு தீ வைக்கப்பட்டதாகக் கூறப்படுவதாகவும் அது குறித்துத் தாம் விசாரணை செய்து வருகின்றனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.*

# மதுபோதையில் வாகனங்கள் செலுத்திய மூவருக்கு சிறை

## யாழ். நீதிமன்றம் உத்தரவு

யாழ்ப்பாணம், ஜூன் 09

மதுபோதை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய குற்றங்களைப் புரிந்த மூவருக்கு ஒரு மாத சிறைத் தண்டனை வழங்கி யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவில் மதுபோதை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய மூவர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் மூவரும் யாழ். நீதிவான் நீதிமன்றில் இன்று திங்கட்கிழமை முற்படுத்தப்பட்டனர்.

மதுபோதையில் சாரத்தியம் செய்தமை மற்றும் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்திய இரண்டு குற்றச்சாட்டுகளின் கீழ் மூவருக்கும் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. மூவருக்கும் குற்றச்சாட்டுக்கள் வாசித்துக் காண்பிக்கப்பட்டன.

மூவரும் தம்மீதான குற்றச்சாட்டுக்களை மன்றில் ஏற்றுக்கொண்டனர்.

மதுபோதையில் சாரத்தியம் செய்த குற்றத்துக்கு தலா 25 ஆயிரம் ரூபாய் தண்டப்பணம் செலுத்தவேண்டும் சாரதி அனுமதிப்பத்திரமின்றி வாகனம் செலுத்தியமைக்கு ஒரு மாத சிறைத் தண்டனையை அனுபவிக்கவேண்டும் என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் ஏ.பீற்றர் போல் தண்டனைத் தீர்ப்பை வழங்கினார்.

# களவாக கிரவல் அள்ளிய இரு வாகனங்கள் சிக்கின

## ஓமந்தையில் சம்பவம்

வவுனியா ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அனுமதியின்றி கிரவல் மண் ஏற்றிச்சென்ற டிப்பர்களை பொலிஸார் கையகப்படுத்தியுள்ளமையுடன் இருவரைக் கைது செய்துள்ளனர்.

ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தாண்டிக்குளம் பகுதியில் ஊரடங்கு நேரத்தில் அனுமதியுமின்றி கிரவல் மண்ணை ஏற்றிச் சென்ற டிப்பர்களே கையகப்படுத்தப்பட்டன. அவற்றின் சாரதிகளும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் பொலிஸ் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். இரு வாகனங்களும் நீதிமன்றித்தில் ஒப்படைப்பதற்காக ஓமந்தை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளன.

# அனுஷா ஏன் நீக்கப்பட்டார்? ராதாகிருஷ்ணன் விளக்கம்!

கொழும்பு, ஜூன் 08

மலையகமக்கள்முன்னணியிலிருந்து அனுஷா சந்திரசேகரனை தற்காலிகமாக இடைநிறுத்த கட்சியின் மத்திய குழு ஏகமானதாகவே தீர்மானித்தது. எதிர்வரும் பொதுத் தேர்தலில் இவர் சுயேச்சையாக போட்டியிடுவதனாலேயே கட்சியிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளாரென முன்னாள் அமைச்சரும் மலையக மக்கள் முன்னணியின் தலைவருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ஊடகச் சந்திப்பொன்றின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒருவரைக் கட்சியிலிருந்து உடனடியாக நீக்கிவிட முடியாது. மலையக மக்கள் முன்னணியின் பிரதிச் செயலாளர் நாயகம் அனுா சந்திரசேகரன் எதிர்வரும் பொதுத்தேர்தலில் சுயேச்சையாக போட்டியிடுகின்றார்.

ஒரு கட்சியில் அங்கம் வகித்துக்கொண்டு இன்னொரு கட்சியில் தேர்தலில் போட்டியிடுவது கட்சியின் கொள்கையைமீறும்செயல். எனவே இவர் கட்சியின் கொள்கைக்கு மாறாக செயற்பட்டமைக்கு விளக்கம் கோரி கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு மலையக மக்கள் முன்னணியின் மத்திய குழு கூடி முடிவெடுத்து கடிதம் ஒன்றை அவருக்கு அனுப்பியது.

அனுஷா சந்திரசேகரனை நாங்கள் கட்சியிலிருந்து நீக்கவில்லை. இவர் கட்சியின் யாப்பை மீறிச் செயற்பட்டமையால் தற்காலிகமாகவே கட்சியிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இதனால் மலையக மக்கள் முன்னணியில் ஏற்பட்ட பிரதி செயலாளர் நாயகம் பதவி வெற்றிடத்திற்கு கட்சியின் மத்திய குழுவினால் மலையக மக்கள் முன்னணியின் பிரதி பொதுச் செயலாளர் நாயகமாக பேராசிரியரும் மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினருமான விஜயச்சந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார் - என்றார்.

# சஜித்திடம் தற்போது இருப்பது கட்சி அல்ல

## கூறுகின்றார் மேர்வின் சில்வா



கொழும்பு, ஜூன் 08

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் தற்போது இருப்பது கட்சியொன்று அல்ல என்றும் அதுவொரு குழு எனவும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க மற்றும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு இடையிலான மோதல் குறித்து ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்க வெளியேறியவுடன், டி.எஸ்.சேனாநாயக்க, கட்சி மூடப்பட்டுவிட்டதாக எவ்வேளையிலும் கூறவில்லை.

அதேபோல்தான் இன்றும். நான் ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்கவை எப்போதும் பாதுகாப்பேன்.

இதற்கு எதிராக எவரேனும் ஒருவர் வந்தால், நான் நாடாளுமன்றம் சென்று அவர்களின் கழுத்தை நெரிக்கக்கூட பின்வாங்கப் போவதில்லை - என்றார்.

# மட்டக்களப்பு - கொழும்பு இடையே உள்ளூர் விமான சேவை ஆரம்பம்

**பிட்ஸ் எயார் (FITSAIR)விமான நிறுவனத்தினால் மட்டக்களப்பு மற்றும் கொழும்பு ரத்மலான விமான நிலையங்கள் இடையான உள்ளூர் விமான சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.**

**கடந்த 4 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட இந்த விமான சேவை திங்கள் மற்றும் வெள்ளி கிழமைகளில் வாரத்திற்கு இருமுறை நடைபெறும்.**

**காலை 9 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்படும் விமானம் 10 மணியளவில் மட்டக்களப்பைச் சென்றடையும் பின்னர் 10.30 மணியளவில் மட்டக்களப்பில் இருந்து புறப்படும் விமானம் 11.30 மணிக்கு ரத்மலான வந்தடையும்.**

**பன்னிரண்டு இருக்கைகள் கொண்ட இந்த விமானதில் ஒருவருக்கு ரூபாய் 21 ஆயிரம் ஒருவழி பயணத்திற்கான கட்டணமாக அறவிடப்படுகிறது.**

**கொரோனாவினால் நாடு முடக்கப்பட்டதன் பின்னர் மட்டக்களப்பில் விமான நிலையத்தில் தரையிறங்கிய முதலாவது விமானம் இதுவாகும்.**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி *08.06.2020*இல் வெளியிடப்பெற்றது.